செ.கு. எண்: 004 நாள்: 10-01-2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்களின்

அறிக்கை – 10.1.2015

திருப்பூர் மாவட்டம், **திருமூர்த்தி அணையிலிருந்து** கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள பரம்பிக்குளம் பிரதான கால்வாய், உடுமலைப்பேட்டை கால்வாய் மற்றும் உயர்மட்டக் கால்வாய் வாயிலாக பாசனம் பெறும் மூன்றாம் மண்டல பாசனப் பகுதிகளுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடக் கோரி, திருமூர்த்தி நீர்த்தேக்க திட்டக் குழு உள்ளிட்ட கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்ட வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, **திருமூர்த்தி அணையிலிருந்து,** பரம்பிக்குளம் பிரதான கால்வாய், உடுமலைப்பேட்டை கால்வாய் மற்றும் உயர்மட்டக் கால்வாய் வாயிலாக பாசனம் பெறும் மூன்றாம் மண்டலப் பாசனப் பகுதிகளுக்கு பாசனத்திற்காக **11.1.2015** முதல் தண்ணீர் திறந்துவிட ஆணையிடப்படுகிறது.

இதனால், கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள **94,362** ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

ஓ. பன்னீர்செல்வம்

**ஓ. பன்னீர்செல்வம்**
தமிழ்நாடு முதலமைச்சர்